33231

OL/2019/62/T- I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

**62 | T | I,II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

| | |
|---|---|
| පුරවැසි අධ්‍යාපනය | I, II |
| குடியியற் கல்வி | I, II |
| Civic Education | I, II |

**12. 12. 2019 / 0830 - 1140**

පැය තුනයි
**மூன்று மணித்தியாலம்**
*Three hours*

| | | |
|---|---|---|
| අමතර කියවීම් කාලය | - | මිනිත්තු 10 යි |
| மேலதிக வாசிப்பு நேரம் | - | 10 நிமிடங்கள் |
| Additional Reading Time | - | 10 minutes |

**வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

## குடியியற் கல்வி I

**கவனிக்க :**

- **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
- **1** தொடக்கம் **40** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிவுசெய்க.
- **உமக்கு வழங்கப்பட்டுள்ள விடைத்தாளில் ஒவ்வொரு வினாவுக்கும் உரிய வட்டங்களில் உமது விடையின் இலக்கத்தை ஒத்த வட்டத்தினுள்ளே புள்ளடியை (X) இடுக.**
- அவ்விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள மற்றைய அறிவுறுத்தல்களையும் கவனமாக வாசித்து, அவற்றைப் பின்பற்றுக.

**1.** பின்வருவனவற்றுள் சனநாயக ஆட்சிமுறையொன்றின் சிறப்பியல்பு எது?
(1) அரசியல் கட்சிகள் மாறி மாறி நாட்டை ஆட்சி செய்தல்
(2) மக்கள் குழுக்களின் கருத்துக்களுக்கேற்பத் தீர்மானங்களை எடுத்தல்
(3) ஆட்சியில் பங்குபற்றுவதற்கான உரிமை மக்களுக்கு இருத்தல்
(4) கல்விக்கும் சமூக நலனோம்பலுக்கும் முன்னுரிமை வழங்குதல்

**2.** சூழல் உரிமைகள் பற்றிய பிரச்சினைகளின்போது நடவடிக்கைகளை எடுக்கவேண்டிய முக்கிய நிறுவனம் எது?
(1) சுற்றாடல் அமைச்சு
(2) மத்திய சுற்றாடல் அதிகார சபை
(3) வனப் பாதுகாப்புத் திணைக்களம்
(4) புவியியல் மற்றும் சுரங்கமறுத்தல் அலுவலகம்

**3.** பன்மைப் பண்பாட்டுச் சமூகமொன்றில் எதிர்காலப் பிரசைகளிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்துவதற்கு பின்பற்றத்தக்க வினைத்திறனுள்ள நடவடிக்கையாக அமைவது
(1) ஏனையோரின் பண்பாடுகளுக்கு மதிப்பளித்தல்
(2) பல்லினக் குழுக்கள் கலந்துள்ள பாடசாலைகளை ஏற்படுத்துதல்
(3) பிறமொழிகளைக் கற்பதற்கு ஊக்கமளித்தல்
(4) பண்பாட்டுப் பல்வகைமையை ஏற்படுத்துதல்

**4.** அரசியலமைப்புக்கு மேலதிகமாக அவதானிக்கத்தக்க உள்நாட்டுச் சட்டங்களின் வகைகள் இரண்டு,
(1) கண்டியச் சட்டமும் தேசவழமைச் சட்டமுமாகும்.
(2) குற்றவியல் சட்டமும் சர்வதேசச் சட்டமுமாகும்.
(3) குற்றவியல் சட்டமும் குடியியல் சட்டமுமாகும்.
(4) சிவில் சட்டமும் முஸ்லிம் சட்டமுமாகும்.

**5.** பின்வருவனவற்றுள் வாக்காளரின் பொறுப்பை வெளிப்படுத்தும் கூற்றைத் தெரிவுசெய்க.
(1) தேசத்தைக் கட்டியெழுப்பக்கூடிய அர்ப்பணிப்பு மிக்க தலைவர்களைத் தெரிவுசெய்தல்
(2) புதிய வேட்பாளர்களைப் பிரதிநிதிகளாகத் தெரிவு செய்தல்
(3) ஏற்புடைய பரம்பரையில் வரும் தலைவர்களுக்கு வாக்களித்தல்
(4) அதிகாரத்திலுள்ள தலைவர்களுக்கெதிரான குழுவைத் தெரிவுசெய்தல்

**6.** பிராந்திய அமைப்புக்கள் உருவாகுவதற்கு அடிப்படையாக அமைந்த முக்கிய நோக்கங்கள் இரண்டைத் தெரிவுசெய்க.
(1) யுத்தம் சார்ந்த நோக்கங்களும் வர்த்தக நோக்கங்களுமாகும்.
(2) கல்வி சார்ந்த நோக்கங்களும் நலனோம்பல் நோக்கங்களுமாகும்.
(3) யுத்தம் சார்ந்த நோக்கங்களும் பொருளாதார ஒத்துழைப்பு நோக்கங்களுமாகும்.
(4) பொருளாதார நோக்கங்களும் நலனோம்பல் நோக்கங்களுமாகும்.

[பக். 2 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka,
Department of Examinations Sri Lanka

7. கல்துங்கின் மோதல் பற்றிய மாதிரிக்கமைவாக மனப்பாங்கு என்பதனாற் கருதப்படுவது மோதல் உருவாவதில் தாக்கம் செலுத்தும் தரப்பினரின்,
(1) அரசியற் காரணிகள் (2) பண்பாட்டுக் காரணிகள்
(3) சமூகவியற் காரணிகள் (4) உளவியற் காரணிகள்

8. பின்வருவனவற்றுள் இலங்கையர்களுக்கு அரசியலில் பங்குபற்றுவதற்கு அதிக வாய்ப்புக்களை வழங்கிய அரசியலமைப்புச் சீர்திருத்தமாகக் கருதப்படுவது எது?
(1) சோல்பரி அரசியலமைப்புச் சீர்திருத்தம் (2) மக்கலம் அரசியலமைப்புச் சீர்திருத்தம்
(3) மனிங் அரசியலமைப்புச் சீர்திருத்தம் (4) டொனமூர் அரசியலமைப்புச் சீர்திருத்தம்

9. உற்பத்திக் காரணிகளைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவுசெய்க.
(1) உழைப்பு , மூலதனம், ஊதியம், நிலம் (2) முயற்சியாண்மை, வட்டி, மூலதனம், உழைப்பு
(3) நிலம், உழைப்பு, மூலதனம், முயற்சியாண்மை (4) மூலதனம், இலாபம், உழைப்பு, நிலம்

10. நிறைவேற்று மற்றும் நிருவாகச் செயற்பாட்டினால் பிரசைகளின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படல் தொடர்பாகக் கவனஞ் செலுத்துவதற்காக உருவாக்கப்பட்டுள்ள பதவிநிலை யாது?
(1) ஒம்புட்ஸ்மன் (2) பிரதம நீதியரசர் (3) சபாநாயகர் (4) சட்டமா அதிபர்

11. பின்வருவனவற்றுள் பெண்களுக்கெதிராக மேற்கொள்ளப்படும் அனைத்து விதமான பாரபட்சங்களையும் இல்லாதொழிக்கும் உடன்படிக்கை (CEDAW)க்கு அமைய, பெண்களுக்குரித்தான உரிமைகளில் **அடங்காதது** எது?
(1) கல்விக்கும் பயிற்சிக்குமான உரிமை
(2) சமூகப் பாரபட்சங்களிலிருந்து பாதுகாப்புப் பெறும் உரிமை
(3) சுகாதாரத்திற்கும் போசணைக்குமான உரிமை
(4) திருமணம் முடிப்பதற்கும் தொழில் புரிவதற்குமான உரிமை

12. இலங்கைப் பாராளுமன்றத் தேர்தல்களில் தற்போது பயன்படுத்தப்படும் பிரதிநிதித்துவமுறை எது?
(1) எளிய பெரும்பான்மை (2) விகிதாசார
(3) சமாந்தர (4) மாவட்ட

13. மத்திய அரசின் அதிகாரங்களை அரசியலமைப்பின் மூலம் பிராந்திய அரசாங்கங்களுக்கு ஒப்படைத்தல் எப்பெயரால் அழைக்கப்படும்?
(1) அதிகாரப் பகிர்வு (2) அதிகார ஒருமுகவாக்கம்
(3) அதிகார விரிவாக்கம் (4) அதிகாரப் பன்முகப்படுத்தல்

14. பின்வருவனவற்றுள் சமூகமொன்றில் 'பண்பாடு' என்பதைத் தெளிவுறுத்தும் கூற்று எது?
(1) சமூகத்தில் வழக்காறுகளுக்கிணங்க செயற்படல்
(2) சமய நம்பிக்கைகளுக்கமைய பல்வேறுபட்ட வழிபாடுகளைப் பின்பற்றுதல்
(3) சமூகத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட வாழ்க்கை முறைகளுக்கேற்பச் செயற்படுதல்
(4) பல்லின மக்கள் ஒன்றாக வாழ்தல்

15. சமஷ்டி அரசொன்றின் முக்கிய பண்பாக அமைவது யாது?
(1) மத்திய அரசாங்கத்தினால் ஆட்சி செய்யப்படுதல்
(2) அதிகாரங்கள் பகிரப்பட்டிருத்தல்
(3) அதிகாரங்களை மீளப்பெற முடியுமாயிருத்தல்
(4) மேல்சபை ஒன்று காணப்படுதல்

16. அபிவிருத்திச் செயன்முறையின்போது முகங்கொடுக்கும் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு ஒரு நாடு எடுக்கக்கூடிய வினைத்திறன் வாய்ந்த நடவடிக்கையாவது
(1) ஏற்றுமதிப் பன்முகப்படுத்தலை ஊக்குவித்தல்
(2) வெளிநாட்டுக் கடன்களை ஊக்குவித்தல்
(3) மூளைசாலிகளின் வெளியேற்றத்தை ஊக்குவித்தல்
(4) சர்வதேச ஊழியச் சந்தையை ஊக்குவித்தல்

17. 1945 யூன் 26 ஆம் திகதி உலகின் அனைத்துப் பிரசைகளுக்கும் முக்கியத்துவமிக்கதாக அமைந்தமைக்கான காரணி யாது?
(1) இரண்டாம் உலக மகாயுத்தம் நிறைவுற்றமை
(2) ஐக்கிய நாடுகளின் உடன்படிக்கை பிரகடனப்படுத்தப்பட்டமை
(3) சிறுவர் உரிமைகள் சாசனம் பிரகடனப்படுத்தப்பட்டமை
(4) சர்வதேச மனித உரிமைகள் பிரகடனம் பிரகடனப்படுத்தப்பட்டமை

18. அரசியல் விழிப்புணர்வு மிக்க மக்கள் ஒரு நாட்டில் வாழ்வதால்,
(1) தனியாள் ஆற்றல்களை மேம்படுத்தலாம்.
(2) அரசாங்கத்தின் செயற்பாடுகளை விமர்சிக்கலாம்.
(3) எதிர்க்கட்சியின் மக்கள் விருப்பை அதிகரிக்கலாம்.
(4) மக்களுக்கு நேசமான அரசாங்கமொன்றை உருவாக்கலாம்.

[பக். 3 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**19.** காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் விரும்பத்தகாத விளைவொன்று யாது?

(1) வெப்பநீரோட்டம் தூண்டப்படுதல் (2) அமிலமழை பொழிதல்

(3) மழைவீழ்ச்சி செயன்முறையில் மாற்றம் ஏற்படல் (4) மூடுபனி ஏற்படுதல்

**20.** குற்றவியல் சட்டத்திற்கிணங்க தண்டனைக்குரிய குற்றங்களை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) அரசுக்கெதிரான செயல், கொலை, கற்பழிப்பு

(2) கொலை, சிறுவர் துஸ்பிரயோகம், விவாகரத்து

(3) வணிகச் செயற்பாடுகள், கொள்ளை, பாலியல் குற்றம்

(4) கற்பழிப்பு, பொதுச்சொத்துக்களுக்குச் சேதம் விளைவித்தல், காணிப் பிணக்கு

**21.** பின்வருவனவற்றுள் பாடசாலை அங்கத்தவரென்ற வகையில் உங்களால் ஆற்றப்படவேண்டிய **மிகவும்** முக்கியத்துவம் வாய்ந்த கடமையாவது எது?

(1) தினமும் பாடசாலைக்கு நேரத்திற்குச் சமூகமளித்தல்

(2) வகுப்பிலுள்ள மாணவர்களுக்குக் கற்பதற்கு உதவுதல்

(3) கல்விச் செயற்பாடுகளில் நன்கு பங்கெடுத்தல்

(4) பாடசாலையின் சட்ட திட்டங்களைப் பின்பற்றல்

**22.** சனநாயக சமூகமொன்றில் அரசினால் நிறைவேற்றப்படவேண்டிய கடமையொன்றைக் குறிப்பிடும் கூற்றைத் தெரிவுசெய்க.

(1) சமூகத்தின் பழக்கவழக்கங்களுக்கு மதிப்பளித்துச் செயற்படுதல்

(2) நிறைவேற்றுத் துறையுடன் ஒத்துழைத்துச் செயற்படுதல்

(3) உரிய காலத்தில் தேர்தல்களை நடாத்துதல்

(4) சட்டத்தையும் ஒழுங்கையும் பாதுகாத்தல்

**23.** வளச்சமமின்மை என்பதனாற் கருதப்படுவது,

(1) உலகில் வளங்களின் பரம்பலில் காணப்படும் சமமின்மையாகும்.

(2) உலகில் வளங்களுக்கு நிலவும் தட்டுப்பாடாகும்.

(3) வளங்கள் சமமாகப் பரம்பிக் காணப்படலாகும்.

(4) வளங்கள் ஓரிடத்தில் குவிந்திருத்தலாகும்.

**24.** பின்வருவனவற்றுள் நல்லாட்சி நிலவும் நாடொன்றின் அடிப்படை இயல்புகளில் ஒன்று **அல்லாதது** எது?

(1) சுதந்திரமும் நீதியும் உறுதிப்படுத்தப்படல்

(2) உரிமைகளைப் பாதுகாத்தலும் உறுதிப்படுத்தலும்

(3) ஊடகச் சுதந்திரத்தைப் பாதுகாத்தல்

(4) நட்டத்தில் இயங்கிவரும் நிறுவனங்களைத் தனியார்மயப்படுத்தல்

**25.** 1978 ஆம் ஆண்டு இரண்டாம் குடியரசு அரசியலமைப்பில் ஏற்படுத்தப்பட்ட முக்கிய மாற்றமாவது,

(1) நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி பதவியை ஏற்படுத்தியமையாகும்.

(2) ஆளுநர் நாயகம் பதவியை இல்லாதொழித்தமையாகும்.

(3) இலங்கையைச் சுதந்திர அரசாக்கியமையாகும்.

(4) இருசபைகள் கொண்ட பாராளுமன்றத்தை அறிமுகப்படுத்தியமையாகும்.

**26.** உயிரற்ற கூறுகளடங்கிய சோடிப்பதத்தைக் காண்பிக்கும் சரியான விடையைத் தெரிவுசெய்க.

(1) வளிக்கோளம், தாவரங்கள் (2) காலநிலை, மண்

(3) பாறைகள், நுண்ணுயிர்கள் (4) காலநிலை, நுண்ணுயிர்கள்

**27.** உலகமயமாக்கலுக்கு முகங்கொடுப்பதற்காக அமைக்கப்பட்ட வட அமெரிக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்குட்படும் (NAFTA) நாடுகளைக் கொண்டுள்ள விடை எது?

(1) டென்மார்க், ஐக்கிய அமெரிக்க குடியரசுகள், லக்சம்பேர்க்

(2) இந்தியா, ஸ்பானியா, ஐக்கிய அமெரிக்க குடியரசுகள்

(3) ஐக்கிய அமெரிக்க குடியரசுகள், கனடா, மெக்ஸிக்கோ

(4) ஐக்கிய அமெரிக்க குடியரசுகள், நெதர்லாந்து, இத்தாலி

**28.** நாடொன்றின் உற்பத்திச் செயன்முறையில் நிகழும் அடிப்படைச் செயற்பாடுகளைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.

(1) உற்பத்தி, கொள்வனவு, நுகர்வு (2) உற்பத்தி, விநியோகம், நுகர்வு

(3) உற்பத்தி, களஞ்சியப்படுத்தல், நுகர்வு (4) உற்பத்தி, பொதியிடல், நுகர்வு

**29.** மேற்கு நாடுகள் வலுவான தேசிய அரசுகளாக எழுச்சியடைந்தமைக்கான முக்கிய காரணியாவது,

(1) சமூக நலனோம்புகையை கட்டியெழுப்புதல் (2) மானியமுறையைப் பேணல்

(3) மனித உரிமைகளைப் பாதுகாத்தல் (4) தேசிய ஒற்றுமையைக் கட்டியெழுப்புதல்

**30.** ஒற்றையாட்சி முறையில் அவதானிக்கத்தக்க இயல்பாவது

(1) மேற்சபையொன்று காணப்படல்

(2) இறைமையதிகாரம் மத்திய அரசிடம் காணப்படல்

(3) நிறைவேற்றுத் துறையானது சட்டத்துறையினால் தெரிவு செய்யப்படல்

(4) பிராந்திய அரசாங்கங்களுக்கு அதிகாரம் காணப்படல்

[பக். 4 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**31.** சனநாயக நாடொன்றில் அரசியலமைப்பிற்கிணங்க செயற்படுவதால் ஏற்படும் பயன் யாது?
(1) அரசாங்கத்தின் உறுதிப்பாடும் முறையான நிருவாகமும் பாதுகாக்கப்படல்
(2) தகவலறியும் உரிமை காணப்படல்
(3) மக்கள் தமது கருத்துக்களை அரசாங்கத்திடம் முன்வைக்கக் கூடியதாயிருத்தல்
(4) பொருளாதாரத்தின் பயன்கள் அனைவருக்கும் உரித்தாதல்

**32.** அடிப்படை உரிமை என்பதனாற் கருதப்படுவது,
(1) மனிதர்கள் அத்தியாவசியமாகப் பெற்றிருக்க வேண்டியதெனக் கருதப்படும் உரிமைகளாகும்.
(2) சர்வதேச ரீதியாக உடன்படிக்கைகளின் மூலம் அங்கீகரிக்கப்பட்ட உரிமைகளாகும்.
(3) சனநாயக சமூகத்தில் மக்கள் ஏற்றுக்கொண்டுள்ள உரிமைகளாகும்.
(4) மனித உரிமைகளில் நாடொன்றின் அடிப்படைச் சட்டங்களில் உள்ளடக்கப்பட்டுள்ள உரிமைகளாகும்.

**33.** சூழலிலிருந்து கிடைக்கும் சேவையில் வாழ்க்கைக்கு உதவும் சேவைகளை மட்டும் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) நிலம், உயிர்ச்சுவட்டு எரிபொருள் (2) சூரியஒளி, நீர்
(3) நீர், நிலம் (4) உயிர்ச்சுவட்டு எரிபொருள், சூரியஒளி

**34.** முரணான நடத்தையுள்ள நபர்களால் உருவாகக்கூடிய நிலைமைகள் சில கீழே தரப்பட்டுள்ளன.
A - முன்கோபம் அடிக்கடி ஏற்படல்
B - நண்பர்களுடன் அடிக்கடி மோதல் ஏற்படல்
C - தனியாளில் மனஅழுத்தம் ஏற்படல்
D - அயலவருடன் மோதல் ஏற்படல்
மேற்கூறப்பட்டவற்றுள் சமூக சூழ்நிலைகளைக் கொண்டுள்ள விடையைத் தெரிவுசெய்க.
(1) A, C (2) B, C (3) B, D (4) A, D

**35.** 'நாட்டின் எல்லை' ஐ அடிப்படையாகக் கொண்டு மோதல்கள் உருவாகியுள்ள அரசு
(1) அயர்லாந்து (2) இஸ்ரேல் (3) சிரியா (4) ருவாண்டா

**36.** சர்வதேச உறவுகளின் வளர்ச்சியில் தற்காலத்தில் அவதானிக்கத்தக்க போக்கினை உள்ளடக்கிய விடை எது?
(1) வர்த்தகம் மற்றும் பண்பாட்டுத் தொடர்பு (2) வர்த்தகம் மற்றும் கல்வித் தொடர்பு
(3) பண்பாட்டு மற்றும் இராஜதந்திரத் தொடர்பு (4) தொழினுட்ப மற்றும் கல்வித் தொடர்பு

**37.** பின்வரும் '**அ**' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அரசியலமைப்புச் சீர்திருத்தங்கள் '**ஆ**' நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள மாற்றங்களுடன் சரியாகப் பொருந்தும் விடையைத் தெரிவுசெய்க.

| 'அ' | 'ஆ' |
|---|---|
| 1 - சோல்பரி (1947) | A - மந்திரிசபை ஆட்சிமுறையை அறிமுகஞ் செய்தல் |
| 2 - முதலாம் குடியரசு (1972) | B - நிறைவேற்றுக் குழு முறை தாபிக்கப்படல் |
| 3 - இரண்டாம் குடியரசு (1978) | C - அரசியலமைப்பு நீதிமன்றம் நிறுவப்படல் |
| | D - சமூகங்களுக்கேற்ப பிரதிநிதிகள் நியமிக்கப்படல் |
| | E - விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையை அறிமுகஞ் செய்தல் |

(1) A, B, C (2) A, C, E (3) A, B, E (4) A, D, E

**38.** இலங்கையின் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள பணிகளைச் **சரியாகக்** காண்பிக்கும் விடை யாது?
(1) சூழல் பாதுகாப்பு, வீதிப் பாதுகாப்பு, பொதுச் சுகாதாரம்.
(2) பொது உபயோகச் சேவைகள், வாகன உரிமம், வரிவிதிப்பு
(3) பொதுச் சுகாதாரம், பொது வீதிகள், பொது அமைதி
(4) பொது வீதிகள், பொதுச் சுகாதாரம், பொது உபயோகச் சேவைகள்

**39.** பின்வருவனவற்றுள் சட்டமா அதிபரின் அதிகாரங்களுக்கு உட்படுபவை யாவை?
(1) நீதித்துறை தொடர்பான சட்டங்களைப் பிறப்பித்தலும் திருத்தியமைத்தலும்
(2) போதிய சாட்சிகள் இல்லாதவிடத்து குற்றவாளியை விடுவிக்கும் அதிகாரம்
(3) பல்வேறு சட்டங்களையும் விதிகளையும் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் அதிகாரம்
(4) பல்வேறு நீதித்துறை நிறுவனங்களுக்கான நீதிபதிகளை நியமிக்கும் அதிகாரம்

**40.** A, B ஆகிய கூற்றுகளை கருதுக.
A - மனிதன் தனது பொருளாதாரக் கருமங்களை மேற்கொள்கையில் இயற்கை வளங்களையும் கனிய வளங்களையும் வரையறையின்றிப் பயன்படுத்தியுள்ளான்.
B - சூழலின் சமநிலை தகர்வுறுவதால் சூழற் பிரச்சினைகள் தோன்றுகின்றன.
மேற்படி கூற்றுகளுள்,
(1) A உண்மையாவதுடன் B பொய்யானதாகும்.
(2) A பொய்யாவதுடன் B உண்மையானதாகும்.
(3) A, B இரண்டும் உண்மையானவையாகும்.
(4) A, B இரண்டும் பொய்யானவையாகும்.

* *

[பக். 5 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

OL/2019/62/T- I,II

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம் இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka Department of Examinations, Sri Lanka

**62 T I, II**

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (සාමාන්‍ය පෙළ) විභාගය, 2019 දෙසැම්බර්
**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர)ப் பரீட்சை, 2019 டிசெம்பர்**
**General Certificate of Education (Ord. Level) Examination, December 2019**

පුරවැසි අධ්‍යාපනය I, II
**குடியியற் கல்வி I, II**
Civic Education I, II

## குடியியற் கல்வி II

* **முதலாம்** வினா கட்டாயமானதாகும்.
* **முதலாம்** வினாவும் வேறு **நான்கு** வினாக்களும் உட்பட **ஐந்து** வினாக்களுக்கு விடை எழுதுக.

**1.** (i) கிரேக்கத்தில் நிலவிய நேரடி சனநாயகத்தின்கீழ் ஆட்சியில் பங்குகொள்ள சந்தர்ப்பம் வழங்கப்பட்டிருக்காத **இரு** தரப்பினரைக் குறிப்பிடுக.

(ii) சிறப்புப் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் தாபிக்கப்பட்ட நீதிமன்ற அதிகாரமுடைய சிறப்பு நிறுவனங்கள் **இரண்டினைப்** பெயரிடுக.

(iii) மோதல் தீர்வில் மீட்கும் முறை மூலம் தீர்த்துக் கொள்ளத்தக்க மோதல் வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(iv) நாட்டில் சமூக நீதி சீர்குலைவதில் தாக்கம் செலுத்தும் காரணங்கள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(v) நாட்டின் தேசிய பாதுகாப்பைப் பேணுவதற்குப் பிரசையொருவருக்கு உரிய கடமைகள் **இரண்டை** எழுதுக.

(vi) மனித அபிவிருத்திச் சுட்டியை அளவிடுவதற்குப் பயன்படும் **இரண்டு** அம்சங்களை எழுதுக.

(vii) உரிமைகளை வென்றெடுப்பதற்குப் பிரித்தானியாவில் இடம்பெற்ற வரலாற்றுச் சம்பவங்கள் **இரண்டை** எழுதுக.

(viii) சமஷ்டி அரசாங்கத்தில் அதிகாரங்கள் பகிரப்பட்டுள்ள நிறுவனங்கள் **இரண்டை** எழுதுக.

(ix) உலகமயமாக்கலினால் இலங்கைக்குக் கிடைத்துள்ள சாதகமான விளைவுகள் **இரண்டைக்** குறிப்பிடுக.

(x) சர்வதேச வியாபாரத்தின் முக்கிய வகைகள் **இரண்டை** எழுதுக.

(02 × 10 = 20 புள்ளிகள்)

**2.** சமூக அபிவிருத்திச் செயன்முறையில் காணப்படுகின்ற சாதகமானதும் ஆக்கபூர்வமானதுமான ஒன்றென மோதலை அடையாளப்படுத்தலாம்.

(i) உள்ளக மோதல் வகைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) கலந்துரையாடல் மூலம் மோதலைத் தீர்ப்பதால் கிடைக்கும் நன்மைகள் **மூன்றை** எடுத்துக்காட்டுக. (03 புள்ளிகள்)

(iii) (a) வகுப்பறையில் ஏற்படும் பல்வேறு மோதல்களுக்கு முகங்கொடுப்பதற்கு நீங்கள் வளர்த்துக் கொள்ளவேண்டிய பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒன்றின்** முக்கியத்துவத்தை விளக்குக. (02 புள்ளிகள்)

**3.** மக்களின் கருத்துக்களையும் பங்குபற்றலையும் கொண்டமைந்ததும் மக்களால் மக்களுக்காக நடாத்தப்படுவதுமான ஆட்சிமுறையே சனநாயக ஆட்சியாகும்.

(i) சனநாயக ஆட்சிமுறையில் நிலவும் கட்சிமுறையின் வகைகள் **இரண்டைத்** தருக. (02 புள்ளிகள்)

(ii) சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தலில் அடங்கியிருக்கவேண்டிய பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) சனநாயக சமூகத்தில் ஊடகங்களால் ஆற்றப்படவேண்டிய பணிகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒரு** பணியை விமர்சனரீதியாக விளக்குக. (02 புள்ளிகள்)

[பக். 6 ஐப் பார்க்க

Department of Examinations Sri Lanka
Department of Examinations Sri Lanka

**4.** சமூக நன்மைக்காக சட்டம் பற்றிய விழிப்புணர்வைப் பெற்றிருத்தல் அனைத்துப் பிரசைகளினதும் பொறுப்பாகும்.

(i) குடியியல் சட்டத்தின் முக்கிய பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) நாட்டில் சட்டத்தின் ஆட்சி காணப்படாதவிடத்து ஏற்படும் விளைவுகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (a) சட்டத்தின் மேன்மையைப் பேணுவதற்குப் பிரசையென்ற வகையில் உம்மால் பின்பற்றவேண்டிய வழிமுறைகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒரு** வழிமுறையைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

**5.** பண்பாட்டுப் பல்வகைமையைக் கொண்டுள்ள சமூகம் பல்பண்பாட்டுச் சமூகம் என அழைக்கப்படும்.

(i) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் அடிப்படைப் பண்புகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) இலங்கை, பன்மைப் பண்பாட்டுச் சமூகமாவதில் செல்வாக்குச் செலுத்திய காரணிகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

(iii) (a) பன்மைப் பண்பாட்டுச் சமூகத்தின் நன்மைக்காகப் பிரசையொருவர் விருத்தி செய்யவேண்டிய பண்புகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(b) இவற்றுள் **ஒரு** பண்பை விருத்தி செய்வதால் சமூகத்திற்குக் கிடைக்கும் நன்மைகளை விவரிக்குக. (02 புள்ளிகள்)

**6.** சமூகமுறைமை பொதுவாக எதிர்நோக்கும் அடிப்படைப் பொருளாதாரப் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காக பல்வேறு வழிமுறைகள் பின்பற்றப்படுகின்றன.

(i) உலகில் காணப்படும் பொருளாதார முறைகள் **இரண்டை** எழுதுக. (02 புள்ளிகள்)

(ii) பொருளாதார முறைகள் பொதுவாக எதிர்நோக்கும் பொருளாதாரப் பிரச்சினைகள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) இலங்கையின் சந்தைப் பொருளாதார முறையில் காணப்படும் பண்புகள் **மூன்றை** எழுதுக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒரு** பண்பைச் சுருக்கமாக விவரிக்குக. (02 புள்ளிகள்)

**7.** மனிதச் செயற்பாடுகளால் சூழலில் பல்வேறு மாற்றங்களேற்படுவதால் தற்போது சூழல் பற்றி அதிக கவனம் செலுத்தப்படுகிறது.

(i) வளி மாசடைவதால் உயிர்களுக்கு ஏற்படும் தீமைகள் **இரண்டைக்** குறிப்பிடுக. (02 புள்ளிகள்)

(ii) மனிதன் மேற்கொள்ளும் பிழையான செயற்பாடுகளின் காரணமாகச் சமூகச் சூழலுக்கு ஏற்பட்டுள்ள பிரதிகூலங்கள் **மூன்றைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) (a) தற்போதுள்ள சூழற் பிரச்சினைகளைக் குறைப்பதற்காக பிரசைகள் எடுக்கக்கூடிய வழிமுறைகள் **மூன்றை** முன்மொழிக. (03 புள்ளிகள்)

(b) அவற்றுள் **ஒன்றை** உமது வீட்டுச் சூழலில் நடைமுறைப்படுத்தத்தக்க விதத்தை விவரிக்குக. (02 புள்ளிகள்)

* * *

Department of Examinations Sri Lanka

Department of Examinations Sri Lanka